**MC.NO: 9/2024** **Date: 28.01.2026**

**எ மசா 1 - கவிதா, க/பெ. சரவணன்**

**14.08.2025 தேதியிட்ட குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி**

நான் சின்னசேலம் Union Bank ல் 18.12.2023 அன்று ரூ.1,65,000/-த்திற்கு நகையை என் பெயரில் அடைமானம் வைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த நகையை தற்போது மீட்டு என் வசம் உள்ளது என்றால் ஆமாம். என் பெயரில் வைத்த நகையை கடன் பெற்று நகையை மீட்டு நான் தான் வைத்துள்ளேன். நான் உடல் அளவில் ஆரோக்கியமாக தான் இருக்கிறேன். கள்ளக்குறிச்சி சார்பு நீதிமன்றத்தில் HMOP 75/2025 என்ற எண்ணில் எதிர்மனுதாரர் என் உடன் சேர்ந்து வாழ வேண்டும் என மனுதாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு 18 ஏக்கர் நிலங்கள் உள்ளது என என்னுடைய மனு உடன் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அந்த நிலங்கள் எதிர்மனுதாரர் பெயரில் இல்லை என்றால் சரிதான். அவருடைய அப்பா, அம்மா பெயரில் உள்ளது. அந்த சொத்துக்கள் அனைத்தும் எதிர்மனுதாரருடைய பெற்றோரின் சுய சம்பாதிய சொத்துக்கள் என்றால் அந்த விவரம் தெரியாது. எதிர்மனுதாரர் தற்போதும் என்னுடன் வாழ தயாராக இருக்கிறார் என்றால் இல்லை. நானும் என்னுடைய குடும்பத்தினரும் எதிர்மனுதாரர் காலில் விழுந்து என்னுடன் வாழுமாறு கேட்டதில் எதிர்மனுதாரர் மறுத்து என்னை சாகடித்து விடுவேன் என்று கூறினார். தற்போது மனுவிற்காக பொய்யாக வாழ்வதற்கு தயார் என்று சொல்கிறார். நான் மனுவிற்காக கார் ஓட்டி மாதம் ரூ. 45,000/- சம்பாதித்து வருகிறார் என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் உண்மையில் கூலிவேலை தான் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அழைத்தும் நான் தான் வர மறுக்கிறேன் என்றாலும் அதனால் எதிர்மனுதாரர் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறார் என்றால் சரியல்ல. நான் மனுவில் ஜீவனாம்சமாக கோரியுள்ள தொகை அதிகமானது என்றால் சரியல்ல. நான் என்னுடைய ஜீவனத்திற்காக கூலிவேலை செய்து பிழைத்து வருகிறேன்.